**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** **“புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூறும் ஆக்கம் தரும் ”**

**பொருள் :** காணாவிடத்துப் பிறரைப்பற்றிப் புறங்கூறிப் பொய்யாக உடல் தாங்கி உயிர் வாழ்தலைக் காட்டிலும் மடிந்து ஒழிந்து போவது அறநூல் கூறும் ஆக்கம் எல்லாம் தரும்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

**மாமன்ற தீர்மானம் எண் :212**
**இரங்கல் தீர்மானம்**

முன்னாள் மாமன்ற உறுப்பினர் முனைவர் திருமதி. சொ. சக்திபெருமாள் அவர்கள் 24.11.2007 அன்று இயற்கை எய்தினார். இவர் மாமன்ற உறுப்பினராக இருந்தபோது சிறப்பாக பணியாற்றினார். இவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் கொள்கையில் ஈடுபாடு கொண்டு சிறந்த தமிழ் பணி ஆற்றியதோடு மட்டுமல்லாமல், சிறந்த பட்டிமன்ற பேச்சாளராகவும், நல்ல எழுத்தாளராகவும் சிறந்து விளங்கினார். அன்னாரின் இறப்பு தமிழ் சமுதாயத்திற்கும், இம்மாமன்றத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருரும் இவரது குடும்பத்திற்கு இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானம் வாசித்து முடித்தபின், சபையில் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## 1) சி.டபிள்யு.2 / 39182 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 6.11.2007ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :213**

**பதிவு செய்யப்பட்டது**

**மேயர் அவர்களின் தீர்மானம்**

**மாமன்ற தீர்மானம் எண் :214**

56வது வட்டம் மற்றும் 57-வது வட்டம் இந்திராநகர் பகுதியில் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேல் சுமார் ஐம்பதாயிரம் பொதுமக்கள் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள். இந்தப் பகுதியானது அனுப்பானடி கண்மாயாக ஒரு காலத்தில் இருந்தது. தற்சமயம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கம் சார்பில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீட்டுமனைகள் பிரிக்கப்பட்டு ஏலம் டெண்டர் மூலம் விற்பனை செய்து, அனுப்பானடி கண்மாய் பகுதி முழுமையும் வீடுகளாகி விட்டதால், கண்மாய் என்பது இப்போது இல்லை. அரசாங்கம் 10 ஆண்டுகளுக்குமேல் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரிசெலுத்தி வந்தால், அவர்களுக்கு பட்டா வழங்கலாம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அப்படியிருந்தும் சுமார் 60 ஆண்டுகளாக குடியிருந்து, வரிகள் அனைத்தும் செலுத்தி வருகிற காமராசபுரம் (56வது வட்டம்) இந்திராநகர் (57வது வட்டம்) பகுதி மக்களுக்கு கண்மாய் என்கிற அடிசுவடே இல்லா இந்தப் பகுதிக்கு பட்டா வழங்க பொதுப்பணித்துறை தடையில்லாச் சான்று வழங்க இம்மாமன்றம் பரிந்துரை செய்து தீர்மானிக்கிறது.

## 2) சி.டபிள்யு.3 / 39181 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 14.11.2007ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :215**

**பதிவு செய்யப்பட்டது**

## 3) சி.டபிள்யு.3 / 0883 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 16.11.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் :216**

**பதிவு செய்யப்பட்டது**

## 4) ம.நி.1 /36248 / 2007

மதுரை மாநகராட்சி நகர் நல அலுவலர் பணியிடத்திற்கு, துணை இயக்குநர் நிலையில் Dr.V. சுப்பிரமணியன் அவர்களை பணி உயர்வில் மதுரை மாநகராட்சி நகர் நல அலுவலராகப் பணியமர்த்தி வெளியிடப்பட்ட அரசாணை எண்.1275 பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் : 16.10.2007–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :217**

**பதிவு செய்யப்பட்டது**

## 5) B.1/ 35435/ 2007

மதுரை மாநகராட்சி தமிழ்நாடு அரசு, அரசாணை எண்.484, நாள். 8.10.2007 நிதி (படிகள்) துறையின்படி, அரசு ஊழியர்களுக்கு 6வது ஊதியக்குழு நிலுவைத் தொகையை மூன்றாவது தவணை மற்றும் 2003ம் ஆண்டு முதல் 8% வட்டி கணக்கிட்டு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, மேற்படி தொகைகள் வழங்கவும், இதற்கான அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :218**

**பதிவு செய்யப்பட்டது**

## 6) ம.தி.1 /12154 / 2007

மதுரை டவுன் நத்தம் ரோடு (இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் ரவுண்டானா) முற்பகுதியில் உள்ள இடத்தில் மறைந்த திரு.P.T.R. பழனிவேல் ராஜன் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க தமிழ்நாடு பண்பாளர் P.T.R. பழனிவேல்ராஜன் நினைவு அறக்கட்டளையின் வேண்டுதலுக்கிணங்க மதுரை மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண்.35, நாள். 25.4.2007-ல் இவ்விடத்தில் சிலை அமைக்க தடையின்மை வழங்கியுள்ளதை ஏற்று, அரசு திரு. P.T.R. பழனிவேல்ராஜன் அவர்களின் முழுஉருவ வெண்கலச் சிலையினை மதுரை நகரில், மதுரை நத்தம் சாலையின் தொடக்கத்தில் உள்ள TVS சாலை ரேஸ்கோர்ஸ் சாலை மற்றும் கோகலே சாலை சந்திப்பில் அமைக்க கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண். 247 நெடுஞ்சாலைத் (எச்.எஸ்.1) துறை நாள். 8.10.2007 மூலம் ஆணையிட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

1) சிலை வெண்கலத்தால் நிறுவப்பட வேண்டும்.
2) சிலை நிறுவுவது சம்பந்தமாக ஏற்படக்கூடிய முழு செலவிற்கும் (100%) சமமாக உள்ள தொகையினை மதுரை மாநகராட்சிக்கு சிலை பராமரிப்பு செலவுக்காக சிலை வைப்பவர்கள் செலுத்த வேண்டும்.

திரு. P.T.R. பழனிவேல்ராஜன் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி வழங்கிய அரசின் ஆணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :219**
**பதிவு செய்யப்பட்டது**

## 7) ம.ந.1 /14305 / 2007

இம்மாநகராட்சி மைய பொது சுகாதாரப்பிரிவில் மருத்துவ அலுவலராகப் பணியாற்றும் டாக்டர். திருமதி. எம். காந்திமதி, 8.5.2007 முதல் மூன்றாண்டுகள் பட்ட மேற்படிப்புக்கு செல்ல அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட மருத்துவ அலுவலர் பட்ட மேற்படிப்பிற்கு சென்றதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் அனுமதி பெற வேண்டியுள்ளதால், இது குறித்து மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :220**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 8) ம.பொ.4 /15882 / 2007

மதுரை மாநகராட்சி நீச்சல் குளத்தில் அமைந்துள்ள கழிப்பறைகள் மற்றும் குளியலறைகளை பராமரிக்க தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் தினசரி சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு இரண்டு ஊழியர்களை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.82/- வீதம் (மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெற்ற தினக்கூலி ரூ.85/-) M/s.அன்னை தெரஸா தொண்டு நிறுவனத்திற்கு வணக்கத்திற்குரிய மேயரின் 31.5.2007ம் தேதிய முன் ஒப்புதல் பெற்று (01.6.2007 முதல் 31.3.2008 முடிய) அனுமதி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட முன் ஒப்புதல் வழங்கப்பட்ட அனுமதிக்கும், செலவினத் தொகைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :221**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 9) ம.பொ.4 /30184 / 2007

மதுரை மாநகராட்சி அண்ணா மாளிகை வளாகத்தின் உள்புறம் அமைந்துள்ள ECO பூங்காவின் நான்கு கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிப்பு செய்ய தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் தினசரி சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு இரண்டு ஊழியர்களை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.75/- வீதம் (மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்ற தினக்கூலி ரூ.85/-) M/s. அன்னை தெரஸா தொண்டு நிறுவனத்திற்கு ஆணையாளரின் ஒப்புதல் பெற்று 01.10.2006 முதல் 30.9.2007 முடிய அனுமதி வழங்கப்பட்டு, தற்போது 01.10.2007 முதல் 30.9.2008 முடிய மேலும் ஓராண்டுக்கு அனுமதி நீடிப்பும் வழங்கப்பட்டுள்ளது. எனவே 01.10.2006 முதல் 30.09.2008 முடிய ஆணையாளர் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட பராமரிப்பு பணிக்குரிய அனுமதி உத்தரவுக்கும், செலவினத் தொகைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :222**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 10) ம.ச.1 /37446 / 2007

மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துவதற்கு நீதிமன்றம் பணி தொடர்பாக ஏற்படும் சிறுசிறு செலவினங்களை செய்து கொள்வதற்கு சட்ட அலுவலர் (பொறுப்பு) திரு.எம்.சவரிமுத்து என்பவருக்கு கையிருப்பு தொகையாக ரூபாய் இரண்டாயிரம் வழங்கியதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :223**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 11) ம.பொ.4 /13120 / 2006

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வளாகத்தின் நான்கு தளங்களிலும் அமைந்துள்ள 16 கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு 2 ஆண், 2 பெண் பணியாளர் வீதம், சுத்தம் செய்ய தேவையான பினாயில், சோப் ஆயில், கிளீனிங் பவுடர், மாப்பிங் துணி போன்ற அனைத்து உபகரணங்களுடன் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.75/- வீதம், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்ற தினக்கூலித் தொகை ரூ.85/-யை விட குறைவாக ஒப்புக்கொண்டு கொடுக்கப்பட்ட விலைப்புள்ளியை ஏற்று M/s. அன்னை தெரஸா ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் நிறுவனத்திற்கு 31.05.2006ல் வணக்கத்திற்குரிய மேயரின் முன் ஒப்புதல் பெற்று 31.03.2007 முடிய அனுமதி உத்தரவு வழங்கப்பட்டது. 01.04.2007 முதல் 31.3.2008 முடிய மேலும் ஓராண்டுக்கு ஆணையாளர் ஒப்புதல் பெற்று அனுமதி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மாளிகையின் உள்புறம் அமைந்துள்ள நிலைக்குழுத் தலைவர்கள் மற்றும் மண்டலக்குழுத்தலைவர்கள் உபயோகப்படுத்தும் கழிப்பறைகளை தினசரி சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு மேலும் 2 நபர்களை கூடுதலாக மேற்கண்ட தினக்கூலி ரூ.75/- வீதம் அன்னை தெரஸா தொண்டு நிறுவனத்திற்கு 10.1.2007ல் ஆணையாளர் ஒப்புதல் பெற்று அனுமதி உத்தரவு ஓராண்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வணக்கத்திற்குரிய மேயரின் முன் ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும், ஆணையாளர் உத்தரவு பெற்று வழங்கப்பட்ட அனுமதி நீடிப்பு மற்றும் கூடுதல் பணியாட்களுக்கான உத்தரவிற்கும், வழங்கப்பட்ட செலவினத் தொகைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :224**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 12) B 30 / 32797 / 07

மதுரை மாநகராட்சி பள்ளி கூடங்கள், சுற்றுச் சூழல் பூங்கா மற்றும் அலுவலக கட்டிடங்களுக்கு தேவையான காவலர்களை ஒப்பந்த அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 2,250/- (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பது மட்டும்) என்ற விகிதத்தில் நிபந்தனைகளின் அடிப்படையில் சப்ளை செய்ய உத்திரவுகள் வழங்கப்பட்டு அதன் பேரில் 28.09.2005 முதல் M/s. அம்மா செக்யூரிட்டி சர்வீஸ் (க.எண். C 24/8, டி.ஆர்.ஓ.காலனி, மதுரை - 7) நிறுவனத்தாரால் சப்ளை செய்யப்பட்டு வருகின்றது. சப்ளை உத்திரவின் ஒப்பந்த காலம் 27.09.2007 ம் தேதியுடன் முடிவடைகின்றது. மேற்கண்ட நிறுவனத்தார் மகப்பேறு மருத்துவமனை மற்றும் மருந்தகங்களுக்கு காவலர்கள் சப்ளை செய்து வருவதாகவும் அதற்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 84/- (ரூபாய் எண்பத்தி நான்கு மட்டும்) வீதம் சுகாதார பிரிவில் வழங்கப்படுகின்றது எனவும் எனவே மேற்கண்ட விகிதத்தில் தொடர்ந்து சப்ளை செய்வதாக சம்மதம் தெரிவித்துள்ளனர். பள்ளி கூடங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு காவலர்கள் அவசியத் தேவை என்பதால் மேற்கண்ட நிறுவனத்தாரின் சம்மதக் கடித்தினை ஏற்று தொடர்ந்து 28.09.2007 முதல் 27.09.2008 முடிய ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.84/- வீதத்தில் 71 காவலர்களை M/s. அம்மா செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனத்திடம் சப்ளை பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :225**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 21.11.2007**

* * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2007**ம் ஆண்டு **நவம்பர்** திங்கள் **28-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

1) **<u>சி.டபிள்யு.3 / 1436 / 2007</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 21.11.2007ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :226</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

2) **<u>சி.டபிள்யு.2 / 4395 / 2007</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 22.11.2007ம் தேதி நடைபெற்ற கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கணக்குக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் :227</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

3) **<u>சி.டபிள்யு.2 / 0478 / 2007</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 23.11.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது

**<u>மாமன்ற தீர்மானம் எண் :228</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

4) **மநி.1/18107/06**

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற திட்டத்திற்காக மதுரை மாநகராட்சிக்கு இரண்டாண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பொறியியல் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாத நிலையில் மீதமுள்ள பணியிடங்களை அயற்பணி மூலம் நிரப்புவது தொடர்பாக வரப்பெற்ற அரசாணை எண்.520 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.10.2007-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :229**

**பதிவு செய்யப்பட்டது**

5) **ம.வ.1/39500/2007**

அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு கடந்த 1.10.98-ல் சொத்து வரி திருத்தம் குறித்த பொது வரிச்சீராய்வு நடந்தது. ஐந்தாண்டுகள் கழித்து 1.10.2003-ல் நடக்க வேண்டிய பொதுவரிச் சீராய்வு நடக்கவில்லை. 1.4.2008 முதல் சொத்துவரி திருத்தம் குறித்த பொதுவரிச் சீராய்வினை மேற்கொள்ள ஆணையிட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.150, நாள். 12.11.2007-ஐ மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :230**

**பதிவு செய்யப்பட்டது**

6) **மநி.8/ 36047 / 2007**

சேலம் மாநகராட்சியில் செயல்திறனற்ற பணியாளராக பணியாற்றி வரும் திரு.தி.ராஜகோபால் என்பவர் பழனி நகராட்சியில் ஒருவழி பணி மாறுதல் கோரியதின் பேரில், சேலம் மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.62, நாள். 28.6.2006-ல் அனுமதி அளித்துள்ளது. பழனி நகராட்சியில் இருந்து யாதொரு விபரமும் கிடைக்கப் பெறாத காரணத்தால் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்ட சேலம் மாநகராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பேரில், சேலம் மாநகராட்சியில் செயல் திறனற்ற பணியாளராக பணியாற்றும் திரு.தி.ராஜகோபால் என்பவரை, மதுரை மாநகராட்சி தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்தில் கடைசி இளையவராக பணியாற்றவும், இது தொடர்பாக எந்தவித முன்னுரிமையும் கோரக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டும் சேலம் மாநகராட்சி பணியாளர் திரு.தி.ராஜகோபால் என்பவரை, மதுரை மாநகராட்சி செயல் திறனற்ற பணியாளராக பணியாற்ற அரசிற்கு பரிந்துரை செய்து அனுப்ப மாமன்றத்தின் அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :231**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

7) **ம.பொ.3/Est.457/07-08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுவதற்கு இரண்டாம் பகுதி திட்டத்தின் ரீயசவ ஐஐ ளூஉாநஅந) கீழ் 8 பணிகளுக்கு ரூ. 160.72 இலட்சத்தில் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட திட்டத்திற்கு அரசு ஆணை எண். (ஆரு 4) எண். 67, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 24.05.2007ன்படி நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பணிகளுக்கான விபரப்பட்டியல் தயார் செய்யப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விகிதம் விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 1 | ம.பொ. 3/ Est 457/07-08 பரமசிவன் தெரு, நேரு நகர் 1வது, 2வது, 3வது, 4வது தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 24.97 | திரு. D. முருகேசன் | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு **0.17% குறைவு.** |
| 2 | 3 | ம.பொ. 4/ Est 335/07-08 இராமலெட்சுமி நகர் 1வது, 2வது தெருக்கள் மற்றும் குறுக்குத் தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 18.75 | திரு. P. முரளி | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விகதம் விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 3 | 3 | ம.பொ. 4/ Est 336/07-08 இராமலெட்சுமி நகர் 3வது, 4வது, 5வது தெருக்கள் மற்றும் குறுக்குத் தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 20.80 | திரு. P. முரளி | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |
| 4 | 3 | ம.பொ. 4/ Est 337/07-08 இராமலெட்சுமி நகர் மெயின் சாலை முதல் மூன்று மாவடி ரோடு, இராமலெட்சுமி நகர் 3வது தெரு மற்றும் குறுக்குத் தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 22.80 | திரு. K. வெங்கடராமன் | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |
| 5 | 3 | ம.பொ. 4/ Est 339/07-08 லூர்து நகர் 7வது மெயின் மற்றும் 4வது தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 19.50 | M/s. அமிர்தா & கோ | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |
| 6 | 20 | ம.பொ. 3/ Est 458/07-08 மணவாளன் நகர் மெயின், ஜீவனாந்தம் தெரு, விவேகானந்தர் தெரு மற்றும் சர்ச் தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 24.00 | திரு. D. செல்வகுமார் | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |
| 7 | 68 | ம.பொ. 7/ Est 283/07-08 மருதுபாண்டியர் 1வது தெரு முதல் 5வது வரை உள்ள குறுக்கு தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 14.90 | திரு. R. உதயகுமார் | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |
| 8 | 68 | ம.பொ. 7/ Est 284/07-08 மருதுபாண்டியர் 1வது தெரு முதல் 5வது வரை உள்ள தெருக்களின் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 14.90 | திரு, P. முரளி | 2007 - 08 ம் ஆண்டின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக |

மேற்கண்ட பணிகளுக்கான வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :232**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

8) **ம.பொ.3/Est.345/07-08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக் கழக நிதியின் (கூகுருஜகுளுடு) கீழ் பாதாள சாக்கடைத் திட்டம் முடிவடையாத காரணத்தினால் இரத்து செய்யப்பட்ட பணிகளுக்கு மாற்றாக 47 பணிகளுக்கு ரூ.968.18 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான விபரப் பட்டியல் தயார் செய்யப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 1 | ம.பொ. 3/ Est 345/07-08 பாரதிதாசன் தெரு, இந்திரா நகர் மெயின் 1வது, 2வது, 3வது, 4வது குறுக்குத் தெருக்களுக்கு பாதாள சாக்கடை சரி செய்து தார் சாலை அமைத்தல். | 24.90 |
| 2 | 1 | ம.பொ. 3/ Est 459/07-08 ராஜீவ் காந்தி தெரு, எம்.ஜீ.ஆர் தெரு, கீழவைத்தியநாதபுரம் 4வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல். | 17.60 |
| 3 | 2 | ம.பொ. 3/ Est 402/07-08 காமராஜர் தெரு, 1வது தெரு, குறுக்குத் தெரு, ராமமூர்த்தி தெரு, ராமலிங்க தேவர் தெரு, சத்தியமூர்த்தி தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல். | 24.00 |
| 4 | 2 | ம.பொ. 3/ Est 401/07-08 அம்பேத்கார் 1வது, 2வது தெரு, பீமன் தெரு, சிவராமன் தெருக்களில் சிமெண்ட் நடைபாதை மேடை & தார் சாலை அமைத்தல். | 20.00 |
| 5 | 4 | ம.பொ. 4/ Est 340/07-08 அழகர் நகர் 4வது, 5வது, 6வது, 7வது தெருக்களில் தார் சாலை புதுப்பித்தல் | 24.99 |
| 6 | 6 | ம.பொ. 4/ Est 299/07-08 மருதுபாண்டியர் தெருக்களை தார் சாலை புதுப்பித்தல் | 24.50 |
| 7 | 13 | ம.பொ. 3/ Est 437/07-08 மருதுபாண்டியர் மெயின் 1வது, 2வது, 3வது மெயின் மற்றும் 4வது குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 22.40 |
| 8 | 19 | ம.பொ. 3/ Est 347/07-08 சத்தியமூர்த்தி மெயின் 1வது குறுக்குத் தெரு மற்றும் வைகை வீதி பகுதி சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 20.50 |
| 9 | 21 | ம.பொ. 3/ Est 418/07-08 பெரியசாமி கோனார் மெயின் வீதி, அருள்தாஸ்புரம் மெயின் ரோடு, கிருஷ்ணா தெரு தார் சாலை புதுப்பித்தல் | 18.00 |
| 10 | 27 | ம.பொ. 7/ Est 367/07-08 மில் லைன் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.59 |
| 11 | 66 | ம.பொ. 7/ Est 371/07-08 முத்துராமலிங்கபுரம் 1வது தெரு முதல் 4வது தெருக்கள் வரை சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 20.50 |
| 12 | 66 | ம.பொ. 7/ Est 372/07-08 முத்துராமலிங்கபுரம் மெயின் சாலையில் தார் சாலை அமைத்தல் | 23.00 |
| 13 | 66 | ம.பொ. 7/ Est 373/07-08 திருவள்ளுவர் நகர் விரிவாக்கம், பாரதிதாசன் நகர் மற்றும் குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 24.95 |
| 14 | 66 | ம.பொ. 7/ Est 374/07-08 சந்தான முருகன் நகர் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 24.95 |
| 15 | 66 | ம.பொ. 7/ Est 375/07-08 யோகியார் நகர் மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 17.50 |
| 16 | 67 | ம.பொ. 7/ Est 376/07-08 மைனா தோப்பு மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 23.50 |
| 17 | 68 | ம.பொ. 7/ Est 370/07-08 நேரு நகர், திருவள்ளுவர் தெரு, கவிமணி தெரு, அகத்தியர் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 23.50 |
| 18 | 68 | ம.பொ. 7/ Est 360/07-08 பசும்பொன் நகர், நீலகண்டன் கோவில் தெரு, புலித்தேவன் மணிகண்டன், ராஜா சேதுபதி, கவிபாரதி தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 23.50 |

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 19 | 68 | ம.பொ. 7/ Est 359/07-08 பசும்பொன் தெரு, ராதாகிருஷ்ணன் தெரு, காளியம்மன் கோவில் குறுக்கு, விவேகானந்தர் தெரு, ராஜாத்தியம்மன், கண்ணதாசன், சுபாஷ் சந்திரபோஸ், வள்ளியம்மன், அவ்வையார் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 14.00 |
| 20 | 68 | ம.பொ. 7/ Est 358/07-08 பசும்பொன் நகர், செல்லக்கொத்தனார் தெரு, சுருளி ஆண்டிக்கோனார் தெரு, சுபாஷ் சந்திரபோஸ், மருதுபாண்டியன் 1வது, 2வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 16.00 |
| 21 | 68 | ம.பொ. 7/ Est 357/07-08 பசும்பொன் நகர், இந்திராகாந்தி தெரு, ஜீவா தெரு, காந்தி தெரு, இராஜாஜி குறுக்கு தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 17.00 |
| 22 | 68 | ம.பொ. 7/ Est 356/07-08 காளியம்மன் கோவில் தெரு, திருவள்ளுவர், ஏழுமலையான், மருதுபாண்டியன் தெரு, காளியம்மன் கோவில் குறுக்கு தெரு, ராம்பிள்ளை தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 21.00 |
| 23 | 68 | ம.பொ. 7/ Est 355/07-08 நேரு நகரில் உள்ள மலைமகள், திருமகள், வாசுகி, மருதுபாண்டியர், சாஸ்தா தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 19.50 |
| 24 | 68 | ம.பொ. 7/ Est 354/07-08 நேரு நகரில் உள்ள விநாயகர், அவ்வையார், சேதுபதி, சுப்பிரமணிய சிவா, ராமகிருஷ்ணா தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 21.50 |
| 25 | 68 | ம.பொ. 7/ Est 353/07-08 கவிமணி தெரு, கார்த்திக் தெரு, திருநாவுக்கரசு தெரு, மருதுபாண்டியன் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 24.95 |
| 26 | 68 | ம.பொ. 7/ Est 352/07-08 நேரு நகர் காந்திஜி தெரு, கம்பர் தெரு, வ.உ.சி. தெரு, சேக்கிழார், கலைஞர், மாணிக்கவாசகம் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 20.50 |
| 27 | 69 | ம.பொ. 7/ Est 351/07-08 சொக்கலிங்க நகர் 8வது தெரு, 4வது தெரு, 2வது தெரு, ராஜம் நகர், ஜெயந்தி தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 24.89 |
| 28 | 69 | ம.பொ. 7/ Est 378/07-08 சொக்கலிங்க நகர் 9வது தெரு, 8வது குறுக்கு தெரு, 5வது தெரு, 4வது தெரு, 3வது தெரு, 1வது தெரு, குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 12.50 |
| 29 | 71 | ம.பொ. 7/ Est 369/07-08 சிந்தாமணி வாய்க்கால் தெரு, ஜஸ்டின் நகர் 6வது, 3வது தெரு, INTUC காலனி 2வது, 3வது, 3வது குறுக்கு தெரு, பிள்ளையார் கோவில் தெரு, J.K. கல்யாண மஉறால் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 23.50 |
| 30 | 72 | ம.பொ. 7/ Est 365/07-08 இருளாண்டி தேவர் காலனி 1வது மெயின் தெருவில் உள்ள 4 குறுக்கு தெருக்களில் (முல்லை நகர்) சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 8.40 |
| 31 | 72 | ம.பொ. 7/ Est 349/07-08 கோச்சடை பாண்டி கோவில் குறுக்கு தெரு, பால்வண்ண தேவர் தெரு, காளியம்மன் கோவில் தெரு, ராமசாமி முதலியார் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 22.00 |

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 32 | 72 | ம.பொ. 7/ Est 366/07-08 ஜெய் நகர் 1வது தெரு, 2வது குறுக்கு தெரு மற்றும் மூன்று குறுக்கு தெருக்கள், அசோக் நகர் 3வது தெரு, குறுக்கு தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 24.98 |
| 33 | 72 | ம.பொ. 7/ Est 363/07-08 R.K.P. நகர் 1வது மெயின் ரோடு, 2வது மெயின் ரோடு, ஆனந்த நகர் குறுக்கு தெருக்கள், பென்னர் நகர் மெயின் சாலைகளில் தார் சாலை அமைத்தல் | 24.98 |
| 34 | 72 | ம.பொ. 7/ Est 350/07-08 H.M.S. காலனி South Extension மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள் தார் சாலை அமைத்தல் | 15.00 |
| 35 | 32 | ம.பொ. 6/ Est 206/07-08 டவுன் உறால் ரோடு சுற்றுப்புறச் சாலைகளை மராமத்து செய்தல் | 23.25 |
| 36 | 38 | ம.பொ. 6/ Est 342/07-08 வெங்கலக்கடை தெரு, ஜடாமுனி கோவில் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 20.50 |
| 37 | 38 | ம.பொ. 6/ Est 343/07-08 கான்சா மேட்டுத் தெரு, கீழ ஆவணி மூலவிதி தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 12.50 |
| 38 | 36 & 37 | ம.பொ. 6/ Est 621/07-08 வடக்கு மற்றும் மேற்கு சித்திரை வீதிகளில் கவரிங் சிலப், கிரானைட் கற்கள், தொலைபேசி இணைப்பு அமைத்தல் | 24.90 |
| 39 | 38 | ம.பொ. 6/ Est 622/07-08 தெற்கு மற்றும் கிழக்கு சித்திரை வீதிகளில் கவரிங் சிலப், கிரானைட் கற்கள், தொலைபேசி இணைப்பு அமைத்தல் | 24.00 |
| 40 | 38 | ம.பொ. 6/ Est 623/07-08 கிழக்கு மற்றும் வடக்கு சித்திரை வீதிகளில் கவரிங் சிலப், கிரானைட் கற்கள், தொலைபேசி இணைப்பு அமைத்தல் | 12.00 |
| 41 | 60,61 & 62 | ம.பொ. 6/ Est 184/07-08 முனியாண்டி கோவில் தெரு, வ.உ.சி தெரு, காமராஜர் தெரு, அண்ணா முக்கிய வீதி, குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 19.40 |
| 42 | 60, 61 | ம.பொ. 6/ Est 185/07-08 திருப்பதி நகர், ராமமூர்த்தி நகர், நேதாஜி குறுக்குத் தெரு, பகவதியம்மன் கோவில் தெரு, சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 23.30 |
| 43 | 60, 61 | ம.பொ. 6/ Est 229/07-08 வாஞ்சிநாதன் தெரு, பாரதியார் மெயின் ரோடுகளில் தார் சாலை அமைத்தல் | 23.30 |
| 44 | 64 | ம.பொ. 6/ Est 223/07-08 மீனாம்பிகை நகர் மெயின், ஜீவா நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 21.30 |
| 45 | 65 | ம.பொ. 6/ Est 222/07-08 முத்துப்பட்டி மெயின் ரோடு பகுதியில் தார் சாலை அமைத்தல் | 19.00 |
| 46 | 65 | ம.பொ. 6/ Est 225/07-08 நேரு நகர் 1வது தெருவில் தார் சாலை அமைத்தல் | 24.90 |
| 47 | 65 | ம.பொ. 6/ Est 226/07-08 பாலாஜி தெருவில் தார் சாலை அமைத்தல் | 24.90 |
| | | **மொத்தம்** | **968.18** |

**மாமன்ற தீர்மானம் எண் :233**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

9) **ம.தி.1/39257 /07**

மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் கிராமம், சர்வே எண்.231/1-ல் உள்ள 0.03 ஏக்கர் இடத்தில் குடிசை வீடுகட்டி குடியிருந்து வருபவருக்கு நிலக்கிரையம் பெற்று வழங்க உள்ளதால் மேற்படி இடம் மாநகராட்சி எல்லைக்குள் இருப்பதால் மாநகராட்சி தடையில்லா சான்று வழங்கும்படி மதுரை வடக்கு வட்டாட்சியர் ந.க.எண். 22689/07/ஆ1, நாள்.3.11.2007-ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி இடம் சர்க்கார் புறம்போக்கு இடமாகும். சர்வே ஆவணங்களில் வாய்க்கால் (P.W.D.)என உள்ளது. தற்போது வாய்க்கால் முழுவதும் பலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டிடம் மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டுள்ளன. தற்போது வாய்க்கால் உபயோகத்தில் இல்லை. எனவே மேற்படி தல்லாகுளம் கிராமம் சர்வே எண்.231/1-ல் உள்ள 1518 ச.அடி நிலத்தை, நிலக்கிரையம் பெற்று வழங்க மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :234**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

10) **ம.பொ.6/ம.எண்.243/07-08**

மதுரை மாநகராட்சி, மையப்பொறியியல் பிரிவு, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியான மீனாட்சி பூங்கா சுற்றுலா வளர்ச்சி நிதியின் கீழ், மேற்கொள்ளப்பட இருந்த கழிப்பறை கட்டும் பணியை மாற்று இடத்தில் மாற்றி அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி பெரியார் பேருந்து நிலையத்தில் கழிப்பறை கட்டும் பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :235**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

11) **ம.வ.2/ 39145/2007**

மதுரை மாநகராட்சி அண்ணா மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பூங்காவிற்கான நுழைவு கட்டணம் ரூ.2/- என நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. இக்கட்டணத்தின் அடிப்படையில் கடந்த 2006-2007ம் நிதியாண்டில் ரூ.15,05,236 வசூலிக்கப்பட்டுள்ளது. 2006-07ம் நிதியாண்டில் சுற்றுச்சூழல் பூங்காவிற்கான நுழைவு கட்டணம் வசூல் மற்றும் பராமரிப்பு செலவினத்தை ஒரு மாதத்திற்கு கணக்கிடப்பட்டு கீழ்கண்ட விபரம் தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நுழைவு கட்டண வசூல் வரவு | - | ரூ.1,25,436 |
| பராமரிப்பு செலவு | - | ரூ.3,42,259 |
| **பற்றாக்குறை (or) கூடுதல் செலவினம்** | - | **ரூ.2,16,823** |

சுற்றுச்சூழல் பூங்கா நுழைவு கட்டண வசூல் வரவை காட்டிலும் பராமரிப்பு செலவினம் கூடுதலாக இருப்பதால், இக்கூடுதல் செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு நுழைவு கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நுழைவு கட்டணத்தை ரூ.2/- லிருந்து ரூ.4/- அல்லது ரூ.5/- அல்லது ரூ.10/- என உயர்த்தும் பட்சத்தில் ஒரு மாதத்திற்கு வசூலாக கூடிய வரவு மற்றும் பராமரிப்பு செலவு குறித்த விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | நுழைவுக் கட்டணம் | வரவு (ஒரு மாதத்திற்கு) | செலவு (ஒரு மாதத்திற்கு) | கூடுதல் செலவினம் (ஒரு மாதத்திற்கு) | கூடுதல் வருமானம் (ஒரு மாதத்திற்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | ரூ.2/- (தற்போதைய கட்டனம் | ரூ.1,25,436/- | ரூ.3,42,259/- | ரூ.2,16,823/- | -- |
| 2 | ரூ.4/- | ரூ.2,50,872/- | ரூ.3,42,259/- | ரூ.91,387/- | -- |
| 3 | ரூ.5/- | ரூ.3,13,591/- | ரூ.3,42,550/- | ரூ.28,668/- | -- |
| 4 | ரூ.10/- | ரூ.6,27,182/- | ரூ.3,42,259/- | -- | ரூ.2,84,923/- |

மதுரை நகரின் சிறந்த பொழுதுபோக்கு மையாக விளங்கக்கூடிய சுற்றுச்சூழல் பூங்காவில் நாளுக்கு நாள் பார்வையாளர்களின் கூட்டமும் அதிகரித்துக் கொண்டே வருவதால் அதற்கேற்ப பராமரிப்பு பணிகளையும் அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், சுற்றுச்சூழல் பூங்கா நுழைவுக் கட்டணத்தை உயர்த்துவதற்கும், மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5-ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கான நுழைவுக் கட்டணம் மாமன்றத்தால் உயர்த்தி நிர்ணயிக்கப்படவுள்ள கட்டணத்தில் 50% என நிர்ணயிப்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு -** 5-ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளிக்குழந்தைகளை பள்ளி நிர்வாகம் சார்பில் சுற்றுச்சூழல் பூங்காவிற்கு அழைத்து வரும் போது மட்டுமே நுழைவுக் கட்டண சலுகையை வழங்கலாம்.

**மாமன்ற தீர்மானம் எண் :236**
**ரூ.2/- லிருந்து ரூ.3/- என உயர்வு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

12) **மதி.1/35218 /07**

மதுரை வடக்கு வட்டம், பீ.பீ.குளம் கிராமம் டி.எஸ்.எண்.4137/2, 4989/2-ல் உள்ள ஓடை வாய்க்கால் புறம்போக்கு நிலத்தில் திரு.ஜாபர் அலி என்பவருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மதுரை வடக்கு வட்டாட்சியர் கடிதம் ந.க.எண்.1339/07/ஆ1, நாள்.16.10.2007-ல் வரப்பெற்ற கடிதம் வாசிக்கப்பட்டது. மேற்படி இடம் சர்வே வார்டு 10, பிளாக் எண்.42 TS No.4137/2(P) மற்றும் 4989/2(P) பீ.பீ.குளம் கிராமத்தில் கட்டுப்பட்ட ஓடை வாய்க்கால் புறம்போக்கு இடமாகும். மேலும் மனுதாரர் பட்டா கோரும் இடம் வாய்க்கால் தடுப்புச் சுவருக்கு வெளியில் உள்ளது. தற்போது திரு.ஜாபர்அலி என்பவரின் உபயோகத்தில் இருந்து வருகிறது. மனுதாருக்கு ஏற்கனவே 2.2.1968-ல் மதுரை நகராட்சி மன்றத்தில் தீர்மானம் எண். 592(13) / 27.1.1968-ல் மனுதாருக்கு பிரஸ்தாப இடத்தை ஜாரி செய்ய சிபாரிசு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், வருவாய் கோட்டாட்சியரின் செயற்குறிப்பு எண்.ந.க.எண். 38546/68D நாள்.30.6.1969-ல் மனுதாருக்கு ஜாரி உத்தரவு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்திற்கு பட்டா வழங்க மாநகராட்சிக்கு ஆட்சேபணை இல்லா சான்று வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :237**

**தடையில்லா சான்று வழங்கி குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

13) **மபொ.7/ம.எண்.90/07-08**

வார்டு எண்.30-ல் தற்போது உள்ள மேற்கு மண்டல அலுவலகமானது போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலும், மிகவும் பழமையான கட்டிடமாக உள்ளதாலும் புதிய பாலம் கட்டப்பட்டு வருவதால் மிகவும் இடையூராகவும் எவ்வித புனரமைப்பு பணிகளும் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே புதிதாக ஒரு மண்டல அலுவலகம் கட்ட வேண்டியது அவசியமாக உள்ளது.

வார்டு எண்.72-ல் கோச்சடை பம்பிங் ஸ்டேசன் வளாகத்தில் கிழக்கு புறமுள்ள காலியிடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய மண்டல அலுவலகம் கட்ட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :238**

**மேயர், துணை மேயர், ஆணையாளர் மற்றும் மேற்கு மண்டலத்தலைவர் ஆகியோர் கலந்துபேசி முடிவு செய்ய வேண்டியது என தீர்மானிக்கிறது.**

14) **மதி.1/ 39524 /07**

வார்டு எண்.4 தல்லாகுளம் கிராமம், சர்வே எண்.113/5, ஒரு சுடுகாடு மற்றும் இடுகாடு அமைக்கப்பட்டு அதை சம்பக்குளம் கிராம மக்கள் மயானமாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த மயானத்தின் அருகில் அழகர் கோவில் சாலையையும், மேலூர் சாலையையும் இணைக்கும் 120 அடி சாலை அமைந்துள்ளது. இந்த சாலையை தொட்டு குடியிருப்பு கட்டிடங்களும், மருத்துவமனைகளும் நிறைந்தள்ளது. இந்த மயானத்தை சுடுகாடாக பயன்படுத்துவதால் அதை சுற்றிலுள்ள பொதுமக்கள் மற்றும் வடக்கு மண்டலத் தலைவர் ஆகியோர் சுற்றுச்சூழல் பாதிப்பதாகவும் சுகாதாரக்கேடு உண்டாகுவதாகவும், அதை அகற்றும் படியும் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த இடம் புதூர் பாகம் -II திட்டப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த மயானத்திலிருந்து சுமார் ½ கி.மீ. தூரத்துக்குள்ளாகவே பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்டு மாநகராட்சியால் பராமரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட மயானம் உள்ளது. ஆகவே இந்த மயானம் இவ்விடத்தில் தேவையில்லை. ஆகவே இந்த மயானத்தை சம்பக்குளம் மக்கள் பயன்படுத்துவதை தடை செய்து அங்கீகரிக்கப்பட்ட மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மயானத்தை பயன்படுத்துபடியும் உத்தரவிடக்கோரி மாவட்ட ஆட்சியரை கோர மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :239**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

15) **மநி.5/09880/2007**

மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர், வணக்கத்திற்குரிய துணைமேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் AIRCEL சிம்கார்டு ARP 1499 திட்டத்தின்கீழ் 25.11.2007 முதல் 24.10.2011 முடிய வழங்குவதற்கு உண்டான செலவீனம் வருடம் ஒன்றுக்கு ரூ.1,07,928/- வீதம் மேற்கண்ட காலத்திற்கு உண்டான செலவீனம் ரூ.4,31,712/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :240**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

16) <u>**ம.நி.5/09880/2007**</u>

மதுரை மாநகராட்சி பணிகள் தொய்வின்றி உடனுக்குடன் செய்து முடிக்கும் நோக்கில் மாநகராட்சியில் பணிபுரியும் கீழ்காணும் அலுவலர்களுக்கு AIRCEL நிறுவனத்தார் முன்மொழிந்துள்ள சலுகை கட்டண அடிப்படையில் Cell Phone மற்றும் ARP 1499' திட்டத்தின்கீழ் சிம்கார்டுகள் ஆகியவற்றை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | இரண்டாம் நிலை அலுவலர்கள் | - | 26 |
| 2) | துப்புரவு ஆய்வாளர்கள் | - | 34 |
| 3) | இளநிலை / உதவி பொறியாளர்கள் | - | 36 |
| 4) | தெருவிளக்கு லைன் இன்ஸ்பெக்டர் மற்றும் நீதி அலுவலர் | - | 05 |
| 5) | Intercom Board (Fixed Cellular Terminal) | - | 05 |
| | | | 106 |

மேற்குறிப்பிட்ட 106 இணைப்புகளுக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.1,58,894/- M/s. Aircel Ltd., மதுரை கிளை நிறுவனத்ததாருக்கு வழங்கவும், இதற்குண்டான Handset (இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் Intercom Board நீங்கலாக) மொத்தம் 75 எண்ணம் M/s. Saravana Enterprises மதுரை நிறுவனத்தாரிடமிருந்து வாங்குவதற்கான செலவீனம் ரூ.60,000/-ஐயும் வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் :241**</u>

<u>**துப்புரவு ஆய்வாளர்கள் என்பதை சுகாதார ஆய்வாளர்கள் (Sanitary Inspectors) என திருத்தம் செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

(ஒம்...) ஜி. தேன்மொழி

மதுரை

மேயர்

நாள் : **26.11.2007**

மதுரை மாநகராட்சி

* * * * * * *

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

**நாள் : 28.11.2007 - Out of Agenda**

**1) ம.பொ. 6/ ம.எண். 749 /2007**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான குன்னத்தூர் சாம்பையன் சத்திரம் இடிக்கப்பட்டு புதிதாக சத்திரம் மற்றும் கடைகள் கட்ட மதிப்பீடுகள் ரூ. 300.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக் கழக (கூசுகுருளூஐடு) நிதியிலிருந்து கடன் பெற்று மேற்கண்ட வேலையினை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :242**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) Jn.S1/ 35966/2006**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், மதுரை மாநகர எல்லைக்குள் உள்ள அனைத்து குடிசைப் பகுதிகளையும் மேம்படுத்தும் திட்டம் (BSUP) செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதியில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி ஸ்திரமான கட்டுமானங்களாக மாற்றி அமைத்துக் கொள்ள வங்கியின் மூலமாக சம்பந்தப்பட்ட குடிசையின் உரிமையாளர்களுக்கு வங்கியின் மூலம் கடன் பெற வழிவகை செய்யும்பொருட்டு அந்த கட்டுமானங்களுக்கு வரைபட அங்கீகாரம் பெறப்பட வேண்டியது அவசியமாகிறது. மத்திய, மாநில அரசின் திட்டத்தை இம்மாநகராட்சி முனைப்புடன் செயல்படுத்திக் கொண்டு இருப்பதால், பிரஸ்தாப குடிசைப்பகுதிகளில் மேம்படுத்தப்படும் கட்டுமானங்களுக்கு நகரமைப்புப் பிரிவில் வரைபட அங்கீகாரம் வழங்குவதற்கு வசூலிக்கப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களை வசூல் செய்வதிலிருந்தும் விதிகளை அமல்படுத்துவதிலிருந்தும் முழு விலக்கு அளிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :243**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) B 30/ 15875/2006**

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் உள்ள பல ஆண்டுகளுக்கு மேலாக எவ்விதத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு தற்போது உபயோகப்படுத்த இயலாத நிலையில் கழிதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட 13 டிராக்டர், டிரெய்லர் மற்றும் டிரெய்லர் வாட்டர் டாங்க் வாகன இனங்கள் **தற்போது உள்ள நிலையிலேயே** ”வேளாண்மை பொறியியல் துறை மூலம் உரிய விலை மதிப்பீடு பெற்று ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய மாமன்றத்தின் (தீர்மானம் எண். 116, நாள். 01.06.2005) ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பேரில் அரசு வேளாண்மை பொறியியல் துறை நிர்வாகப் பொறியாளர் வாகனங்களை ஆய்வு செய்து 29.12.2005 ல் கழிதல் சான்று மற்றும் மதிப்பீடு நிர்ணயித்து கொடுத்துள்ளார். இதன் படி 13 வாகன இனங்களுக்கும் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,92,000 என நிர்ணயிக்கப்பட்டது.

மேற்கண்ட மதிப்பீட்டின் பேரில் வாகனங்களை ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய உரிய நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு பல முறை ஏலம் / டெண்டர் கோரியதில் எவரும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக டெண்டர் கொடுக்கவில்லை.

| வ. எண். | கோப்பு எண் | வாகனம் எண் | வாகனத்தின் பெயர் | மாடல் | ஏலம் / டெண்டர் கோரியது | வேளாண்மை பொறியியல் துறை பொறியாளரின் 29.12.2005 ம் தேதிய மதிப்பு (ரூபாய்) | டெண்டர் தொகை (ரூபாய்) | குறைவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1. | B 30/00072/06 | TN 59 C 6060 | டிராக்டர் | 1993 | 6 முறை | 42000 | 9500 | 32500 |
| 2. | B 30/00073/06 | TN 59 C 7337 | டிராக்டர் | 1993 | 6 முறை | 42000 | 12100 | 29900 |
| 3. | B 30/15869/06 | TN 59 D 2062 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 21500 |

| வ. எண். | கோப்பு எண் | வாகனம் எண் | வாகனத்தின் பெயர் | மாடல் | ஏலம் / டெண்டர் கோரியது | வேளாண்மை பொறியியல் துறை பொறியாளரின் 29.12.2005 ம் தேதிய மதிப்பு (ரூபாய்) | டெண்டர் தொகை (ரூபாய்) | குறைவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 4. | B 30/15870/06 | TN 59 C 7576 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8500 | 19500 |
| 5. | B 30/15871/06 | TN 59 C 6789 | டிரெய்லர் | 1993 | 4 முறை | 28000 | 9000 | 19000 |
| 6. | B 30/15872/06 | TN 59 D 2065 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 20500 |
| 7. | B 30/15874/06 | TN 59 C 8000 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8500 | 19500 |
| 8. | B 30/15875/06 | TN 59 C 5678 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8000 | 20000 |
| 9. | B 30/15877/06 | TN 59 D 2063 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 6500 | 21500 |
| 10. | B 30/15878/06 | TN 59 D 2067 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 10000 | 18000 |
| 11. | B 30/15879/06 | TN 59 D 2066 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8000 | 20000 |
| 12. | B 30/15880/06 | TN 59 D 7070 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 9000 | 19000 |
| 13. | B 30/16961/06 | MDA 221 | டிரெய்லர் வாட்டர் டாங்க் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 12500 |
| | **மொத்தம்** | | | | | **3920000** | **111600** | **273400** |

மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டிற்கு மிகவும் குறைவாக டெண்டர் வரப்பட்டு உள்ளதை அனுமதிக்க இயலாமல் நிராகரிக்கப்பட்டு உள்ளது. **கழிதல் வாகனங்கள் நிறுத்தப்பட்டு நீண்ட காலமாவதால் அதன் மதிப்பீடு மேலும் குறையும் நிலையில் உள்ளது -** என்ற நிலையில் இவற்றிற்கான மதிப்பீட்டினை உரிய படி மறு நிர்ணயம் செய்து இவற்றை கழிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே இதன் பொருட்டு மதுரை மாநகராட்சி ஆணையாளர் தலைமையில் மாநகராட்சி முதன்மை அதிகாரிகள் மற்றும் இதே போன்ற வாகனங்கள் கையாளப்படும் வெளி இலாகா பொறியாளர்கள் இரண்டு நபர்கள் உள்ளிட்ட **“மறு சீராய்வுக் குழு”** ஒன்று அமைத்து மேற்கண்ட வாகனங்களுக்கு மதிப்பீடு மறு நிர்ணயம் செய்து பெற்று இவற்றை கழிதல் செய்யும் நடவடிக்கைக்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :244**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 4) ம.ந.1/ 29605 /2007

மதுரை மாநகராட்சி, பொது சுகாதாரப்பிரிவு நலவாழ்வு மையம் எண்.14-ல் மருத்துவ அலுவலராகப் பணியாற்றி வரும் டாக்டர். திருமதி. முகமது ஜெய்னம்பு என்பவர் சென்னையில் இருக்கும் அயல்நாட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக சௌதி அரேபியா அரசின் சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள மருத்துவமனைக்கு மருத்துவராக தேர்வு செய்யப்பட்டு, பணிக்கு செல்ல 5 ஆண்டு காலம் அயல்நாட்டு வேலைக்கான விடுப்பு வழங்குமாறும் 5 ஆண்டு காலம் பணிமுடித்து மீண்டும் மாநகராட்சி பணிக்கு வருவதாகவும் வரத்தவறினால் இழப்பு தொகையாக ரூ.2,50,000/- செலுத்துவதாகவும் தெரிவித்து ரூ.20.- மதிப்புள்ள முத்திரைத்தாளில் கையொப்பமிட்டுள்ளார். மேற்படி தொகையை செலுத்தத் தவறினால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அண்ணாநகர் கோட்ட செயற்பொறியாளரும் திரு.எம்.முத்து அவர்களின் குமாரருமான திரு.எம். ஜெயபால் (1) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சிறப்புத் திட்டக் கோட்ட செயற்பொறியாளரும் திரு. எ. மொகிதீன்பாட்சா குமாரருமான திரு. முகம்மது அஜிஜுல்லா (2) ஆகிய இருவரும் பொறுப்பேற்று கட்டி விடுவதாகவும் உறுதி அளித்துள்ளனர். எனவே அரசு ஆணை எண்.196, பி ஃ எ.ஆர். துறை நாள். 20.5.91 மற்றும் அரசு ஆணை எண்.220, பி ஃ எ.ஆர். துறை நாள். 12.8.94 மற்றும் கடிதம் எண். 8023.95-1, நாள். 1.1.96-ன்படி அரசு ஊழியர் ஒருவர் (ரீசடிஎநன °சடியெவடைநேச ) ஆக இருப்பின் "அயல்நாட்டு" வேலைக்கான விடுப்பு மூன்று வருடங்கள் வழங்கலாம் என்றும் கூடுதலாக இரண்டு வருடங்கள் நீடிக்கலாம் என்றும் உள்ளதால், டாக்டர். முகமது ஜெய்னம்பு மருத்துவ அலுவலரை அரசின் உத்தரவு பெற்று அயல்நாட்டு வேலைக்கான விடுப்பு 5 ஆண்டுக்காலம் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் :245**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **28.11.2007**

* * * * * * * *